புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

==========================================================================

# லக்கானிய உளவியல் நோக்கில் சில படைப்புகள்

==========================================================================

**முனைவர் ஆ.முத்தையன்**
உதவிப்பேராசிரியர்
தமிழ் இளங்கலை மற்றும் முதுகலைத்துறை (சு-2)
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் – 635601.

**முன்னுரை**

இன்றும் அழகியல் திறனாய்வு பற்றிய சிந்தனையைப் பலரும் முன்னெடுப்பதைக் காணமுடிகிறது. அழகியல் ஆரம்பகட்ட, இலக்கிய ரசனையை வரவேற்க உருவாக்கப்பட்ட வடிவம். படைப்பாளர்கள் கடவுளர்களாக உருவாக்குவதற்குப் பயன்பட்ட வடிவம். இன்றைய பின்நவீனத்துவ காலத்திலும் இக்குரல் மேலெழும்ப காரணம்?, சமூகத்தின் இயங்கியலில் மாற்றத்தை விரும்பாத தன்மையே. மொழியின் ஆழங்கால் அமைப்பைப் புரிந்துகொள்ள முயற்சிக்காத சோம்பேறி மனநிலை. இம்மரபு மனநிலைகளே புதிய ஆய்வு முடிவுகளை ஏற்க மறுக்கின்றன. மாறும் புதிய பண்பாட்டை ஏற்க மறுக்கின்றன. அதற்கேற்ப மொழியில் மீண்டும் மீண்டும் பழமையை நிலைநாட்டுவதற்கான தொடர் பொதுப்புத்தியைக் கட்டமைக்க முயற்சிக்கின்றன. அப்படிப்பட்ட மொழியினை நன்கு ஆராயும்போது புதிய கருத்துகளை, சமூகத்தை, பண்பாட்டை வளர்த்தெடுக்க முடியும். இக்கட்டுரை மொழியின் பண்புகளையும் அதனோடு தொடர்புடைய ழாக் லக்கான் முன்வைக்கும் குறியியல் பார்வையிலான உளவியலையும் கொண்டு மொழியின் பண்பாட்டுத் தன்மைகளை ஆராய முயற்சிக்கிறது. மொழியில் கவனிக்க வேண்டிய இடங்களைச் சுட்டிக் காட்ட விழைகிறது.

**உளவியல் சிந்தனை**

உளவியலில் சிக்மண்ட் ஃப்ராய்ட் (1856 - 1939), கார்ல் குஸ்தவ் யூங் (1875 - 1961), ழாக் லக்கான் (1901 - 1981) ஆகியோர் முதன்மையானவர்கள். அவர்களின் சிந்தனைகள் மனித உளவியலை ஆராய்வதற்கு மட்டுமல்ல, மனிதர்களின் பண்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கும் மிக முக்கியமான சிந்தனைகளாகும். இவர்களுள் சிக்மண்ட் ஃப்ராய்டு, யூங் ஆகிய இருவரை அடுத்து உளவியலின் வளர்ச்சிக்கு வித்திட்டவர் ழாக் லக்கான். அவரின் குறியியல் அடிப்படையிலான உளவியல் பார்வை

என்பது மிகவும் குறிப்பிடத்தகுந்தது. (இக்கட்டுரை தி.கு.இரவிச்சந்திரன் அவர்கள் எழுதிய மூாக் லக்கான், அடையாளம், 2023 என்கிற நூலை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது.)

**மூாக் லக்கானின் மொழியியல் பார்வை**

லக்கானின் பார்வையில் மொழி முதன்மையானது (மொழி முதல்வாதம்). அவர் கனவை மொழியாகப் பார்த்தவர். நான், நீ, உடல், சமூகம், வாழ்வு, உறவுகள் எல்லாம் மொழியே என்கிறார். மக்களின் எண்ணங்களை மொழிதான் இயக்குகிறது. மொழி என்பது குறிகளின் ஒழுங்கமைவாக இருக்கிறது. சமூகம் இயங்குவதற்கு மொழியின் பங்கு அவசியம் என்கிறார். அவை குறிப்பான், குறிப்பீடாக இயக்கம் கொள்கிறது. மேலும், மொழிக்கும் ஆதிவடிவம் உள்ளது; பிறப்பு, வளர்வு, இறப்பு உள்ளது என்கிறார்.

அவர் மொழியின் இயல்புகளைப் புரிந்துகொள்ளாமல் உள இயல்பு, சமூக இயல்புகளைப் புரிந்துகொள்ள முடியாது என்கிறார். சமூகத்தோடு உள்ளத்தையும் மொழிதான் கட்டமைக்கிறது. மொழி என்பது இயக்கமாகின்றது என்றும் கூறுகிறார். நனவிலியானது மொழி போன்ற அமைப்புடையது. நனவிலி = மொழி, நனவிலி = சொல்லாடல் (சொல்லாடல் என்பது மொழி உறவாடல்) என்கிறார். மொழி என்பது புறவயமானது (முழுமைக்கும் புறமல்ல. அகத்தில் இருக்கின்ற புறம்.). மொழிதிணிப்பு அகநிலையப் பிளவுபடுத்தி நனவிலியை உருவாக்குகிறது. நனவிலி வேட்கைகளை மொழியே அமுக்கிறது. எனவேதான், மனம் என்பது மொழியே என்றும் மொழியால் வாழ்பவன் மனிதன் என்றும் கூறுகிறார். மனித உறவுகள், சமூக உறவுகள் அனைத்திலும் மொழியின் ஆதிக்கம் உள்ளது. கல்வி அரசியல், கலை, சட்டம் என அனைத்தும் மொழியாக இருக்கிறது.

மொழியால் நனவிலி உருவான பிறகு நனவிலி வேட்கைகள் யாவும் குறிப்பான் தகுதியைப் பெற்று மொழிப்படி வெளிப்பட வேண்டிய கட்டாயத்திற்கு வந்துவிடுகின்றன. நனவிலி அமைப்பை மொழியின் விதைகள் தீர்மானிக்கின்றன. அதனால் நம்மைதான் மொழி பேசுகிறது என்கிறார். மொழிதான் மனத்தைக் கட்டமைக்கிறது. மொழிக்கு முற்பட்ட காலத்து அகநிலை வேறு. அது கட்டற்ற அகநிலை. சமூகமும் மொழியும் இணைந்த உளக்கூறு இந்த உவர். மொழி வழியில் பெறப்பட்டது உவர். மொழியின் குறையுடன் வளர்கிறது. மனிதனின் விருப்பங்கள் உவருக்கான விருப்பங்களே என்று தம்முடைய குறியியல் பார்வையினை விளக்குகிறார்.

**லக்கானின் உளவியல் விளக்கங்கள்**

ஃபிராய்டிய கருத்துகளை ஏற்றுக்கொண்ட லக்கான் தம்முடைய சிந்தனைகளைக் குறியியல் பார்வையில் விளக்குகிறார். அவற்றுள் கண்ணாடிப்பருவம், ஒன்றுதல், ஒட்டுதல், மற்றவர், உவர், மொழிதல் – குறிப்பான் X குறிப்பீடு = குறி, லாங் மற்றும் பரோல், நனவிலி = மொழி, பாலுணர்வு, பாலுமை, இடையக உறவு, பதிலியன், ஆகன், தன்மோகம், உறைவு, இடப்பெயர்வு, தேவை, குறை, கோரல், வேட்கை முதலிய கருத்தாக்கங்களையும் லிங்கக் குறிப்பான், காயடிப்பு, பரவசநிலை, ஜூயிசான்ஸும் நோய்க்குறியும், மெய், கற்பனை, குறியீடு (SIR - ஒழுங்கமைவு) தந்தை-கருத்துரு, தாய்-புறநிலை, இடிபஸ் நிலை, அமுக்கம், நோய்க்குறி, மருத்துவம், அங்கீகாரம், பண்பாட்டுக் கூறுகள், சாவும் பண்பாடும், காதல் திருமணம், சொல்லாடல் (ஆண்டான் கல்வி, பகுப்பாய்வு சொல்லாடல், இசிப்புச் சொல்லாடல்) முதலானப் பலவற்றை முன்வைக்கிறார். இவற்றுள் சிலவற்றை மட்டும் பார்க்கலாம்.

**கண்ணாடிப் பருவம்**

இவற்றுள் கண்ணாடிப் பருவம் லக்கானியத்தின் மையமாகும். இப்பருவத்தில்தான் ஒன்றுதல், ஒட்டுதல், மற்றவர், உவர் தன்மைகள் உருவாகின்றன. கண்ணாடி பிம்பம் வழி அகம் உருவாகிறது. (அவற்றை மூன்று கட்டங்களாக: சுயம் X புறம் என்ற குழப்பம் (பிறழறிதல் – மிஸ்காக்னிஷன்) உண்டாதல், பதிவம் உண்டாதல் கண்ணாடியில் தெரியும் பிம்பம் உண்மையல்ல (அகத்தேற்றம்), என் அடையாளம் என்ற கருத்து முதலானவற்றைச் சுட்டுகிறார்.)

கண்ணாடி 'நான்' திரிபு 'சமூக நானாக' மாறுவது (பெயர், பதவி, தகுநிலை, கவுரவம், தேசியம், சமயம், சாதி முதலிய சமூக அடையாளங்கள்) என்றும் கண்ணாடி பிம்பம் என்பது அடையாள நெருக்கடி உருவாக்கத்திற்கு (ஈகோ) காரணமான இருக்கிறது என்றும் கூறுகிறார். அவர் கண்ணாடிக்குள் நுழைவதும் மொழிக்குள் நுழைவதும் ஒரே காலக்கட்டத்தில் என்கிறார். கண்ணாடிப் பருவத்தில்தான் ஒன்றுதல், ஒட்டல், அந்நியமாதல், தன்மோகம் (மற்றவர் – எனது இனம், எனது சாதி, எனது மதம், எனது நாடு, எனது மொழி – புறம்சார் தன்மோகம், எனது கவிதை, எனது ஓவியம், எனது குழந்தை, எனது வீடு – அகம்சார் தன்மோகம்), இடையக உறவு (மொழியால் உண்டாவது) முதலான பலவும் உண்டாகிறது என்கிறார்.

**லிங்கக் குறிப்பான்**

லக்கானியத்தில் **லிங்க மையவாதம்** என்பது முதன்மையானது. ஃப்ராய்டியத்தை ஏற்றுகொண்ட சிந்தனை. ஆனால், லக்கானியத்தில் லிங்கம் என்பது குறிப்பான். அது ஆண்குறியல்ல. மாறாக ஆண்குறியும் குறையும் இணைந்தது. லிங்கம் இருப்போர் ஆண். இல்லாதவர் பெண். லிங்கத்தின் இருப்பு, இன்மை குறியீட்டின் அடிப்படை. மெய்யான லிங்கம் ஆண் உலகில் இல்லை என்கிறார். உவர் என்பது லிங்கம் ஆதாரங்களாகும் என்கிறார். ஃப்ராய்ட் கூறும் காயடிப்பும் லக்கான் கூறும் காயடிப்பும் லிங்கத்தின் செயல்பாடாகும். இதில் சுய இன்பம் என்பது மடமை; லிங்கப் பரவசம் என்பதும் மடமை என்கிறார். மேலும், லிங்கக்குறை என்பது பகுதி புறநிலை. அது ஒரு நனவிலி அமைப்பாகும் என்றும் கூறுகிறார்.

**இடிபஸ் நிலை**

லக்கானிய சிந்தனையில் இருபால் குழந்தைக்கும் தாய்காதலே ஆதாரம். காயடிப்பு என்பது லிங்கத்தின் செயல்பாடாகும். இவற்றில் தந்தமை உருவாக்கம் நிகழ்கிறது. மேலும், மொழி இருக்கும் இடத்தில் இடிபஸ் சிக்கல் இருக்கும் என்கிறார். தாய் வேட்கையும் காயடிப்பும் சேர்ந்து இடிபஸ் அமைப்பு நனவிலியில் அமைகிறது என்கிறார்.

**உவர்**

இவருடைய சிந்தனையில் உவர் கருத்தாக்கம் முதன்மையானது. மொழி என்பது நனவிலி உவர் தளத்து சொல்லாடலாகும். பண்பாடு என்பதும் உவரின் சொல்லாடலாகும். அவர் அமைப்பு – மொழி, மொழி – உவர், உவர் – லிங்கம் ஆதாரங்களாகும் என்கிறார். இவற்றுள் குறை, வேட்கை ஆகியவை உவர் குறிப்பானின் முதன்மை என்கிறார். இங்கு கவனிக்க வேண்டியது மொழிதான் உவர். இந்த உவர் மொழி, விதி, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றின் பிரதிநிதியாக உள்ளது.

**நனவிலி = மொழி**

லக்கானியத்தில் மொழி என்பது குறிப்பான் X குறிப்பீடு = குறி, லாங் மற்றும் பரோல் என்ற அமைப்பில் இயங்குகிறது. மொழி அமைப்பே நோய்க்குறி தன்மை கொண்டது. அது உண்மையை அமுக்குவது. மொழியும் அது தொடர்பான சமூக விதிகளும் இணைந்து நம்மை நகர்த்துகின்றன. மொழி

நுழைந்த பிறகு மனிதன் தனது சுயத்தை இழத்தல் என்பது நிகழ்கிறது. மொழியால் உண்மையைச் சொல்ல முடியாது. மெய்ம்மை என்பது இல்லை. மொழியைத் தன்மோகத்தின் (மொழிப்பற்று, சாதிப்பற்று, நாட்டுப்பற்று) அம்சம் என்று கொள்ளலாம். பேச்சு என்பதும் தன்மோகத்தின் சாயல் படியாக்கம். மனிதன் ஒரு மொழி விலங்கு. குறிப்பான் விலங்கு. மொழிதான் அவனை இயற்கை நிலையிலிருந்து விலக்கி வைக்கிறது. எனவே, மொழியிலிருந்துதான் உள்ளம் கட்டமைக்கப்படுகிறது என்கிறது லக்கானியம்.

மொழியால் கட்டமைக்கப்படுகிற அகநிலையை மொழியால்தான் புரிந்துகொள்ள முடியும் என்கிறார். மொழிகளின் விதிகளால் மனித மொழிமனம் இயங்குகிறது. லக்கான் மனிதனை மொழி வடிவில் பார்த்தவர். ஆகையால்தான் மொழி மையவாதம், குறிப்பான் மையவாதம் என்றெல்லாம் விளக்குகிறார். அவர் மொழிக்குள் அந்நியமாதல் இருக்கிறது என்றும் தாய் வேட்கையும் காயடிப்பும் சேர்ந்து இடிபஸ் அமைப்பு நனவிலியில் அமைகிறது என்றும் விளக்குகிறார்.

**பாலுணர்வு, பாலுமை**

லக்கானின் சிந்தனையில் பாலியல் வேறுபாடுகள் என்பது உடல் சார்ந்தது. பாலியல் நிலை மனம் சார்ந்தது. பாலியல் செயல் சமூகம் சார்ந்தது. பாலியல் இன்பம் உவர் சார்ந்தது. பாலுணர்ச்சி மீதான அடக்குமுறையைக் கொண்டே மனித நாகரீகம் கட்டமைக்கப்பட்டுள்ளது என்கிறார். பாலுணர்வு இயற்கை. அதற்கு உடல் ஒரு கருவி. இந்தக் கருவியை இயக்கும் இயங்கு சக்தியாக மொழி இருக்கிறது. இயற்கை மனிதன் சமூக மனிதனாக உருமாற்றம் பெறுவதற்கு மொழி காரணமாகிறது என்கிறார். மொழிவயப்பட்ட மனிதன் உருமாற்றத்தின் காரணமாக இயல்பு தன்மையை இழந்துவிடுகிறான்.

மேலும், ஆண்மையும் பெண்மையும் (கற்பனை) குறிப்பான்கள் என்கிறார். ஆண்மை, பெண்மை பாகுபாடு பார்வை அடிப்படையிலானாது அன்றி வேறில்லை. ஆண் X பெண் உறவைச் சமூகமே / மொழியே தீர்மானிக்கிறது. எனவே, பெண்ணிற்குச் சமூக இருப்பு என்பது இல்லை என்கிறார். பெண்ணுக்கான இருப்பு நனவிலியே இல்லை என்கிறார். அதனால், மொழியில் அவளால் இருப்புக்கொள்ள முடியவில்லை என்பது அவருடைய கருத்து. இதனால் பெண்ணியவாதிகளால் கடுமையான விமர்சனத்திற்குள்ளானார் என்பதும் தெரியவருகிறது.

**பதிலியன், ஆகன்**

பதிலியன் என்பது ஒன்றுக்குப் பதிலாக இன்னொன்று வருவது (அல்லது or என்று சொல்லாம்). ஆகன் என்பது ஒன்றுக்கு மாற்றாக வேறொன்று ஆகி வருவது (அண்ட் and என்று சொல்லாம்). அதாவது, ஆகன் ஆதிக்கம் என்பது **கூட்டுமனப்பான்மை** சார்ந்த இயைபு ஏற்படும் இந்துமதம், தேசியம், தமிழினம் என்றும் பதிலியன் ஆதிக்கம் என்பது சாதி, மதம், மாநிலம், நாடு, இனம் என்கிற வகையில் **தனிமனப்பான்மையை** உண்டாக்கும் என்றும் விளக்குகிறார். லக்கானியத்தில் பதிலியன் என்பது மொழியியல் தன்மைவாய்ந்த உறைவுச்செயலாக இருக்கிறது. ஆகன் என்பது மொழியியல் தன்மைவாய்ந்த இடப்பெயர்வு செயல். வேட்கைகளைப் பொறுத்தவரையில் பதிலியன் வடிவிலும் ஆகன் வடிவிலும் வெளிப்படும். ஆனால், குறை என்பதை மொழி உருவாக்கி அதை இறுதிவரை பேணிப்பாதுகாக்கின்றன. இதன் வெளிப்பாடு பதிலியன், ஆகன் என்று அமைகிறது. அந்தவகையில் தந்தைமை மரபு என்பது பதிலியன் வழிப்பட்டது என்கிறார். இவற்றின் அடிப்படையில் மதம், சாதி, தேசியம், பண்பாடு, நாகரீகம், சட்டம் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளவேண்டும்.

**தேவை, குறை, கோரல், வேட்கை**

தேவை என்பது உடலியல், இயற்கை சார்ந்தது. மெய்நிலை, யாதார்த்தம் என்கிறார். இவற்றோடு இணைந்த செயலாகக் குறை, கோரல் (மறைவு), வேட்கை (முன்னிலை, ஆதிக்க உணர்வு, மொழிதல்) முதலானவும் இடம்பெறுகின்றன. இவை நிலையின்மையின் மையமாக இருக்கின்றன. குறை காரணமாக எழுகின்ற வேட்கையால் பக்தி, காதல், பணி, பணம், சொத்து, திருமணம் முதலான எல்லாம் நிகழ்கின்றன. இக்குறை என்பது மொழியால் நிலைக்கொள்ளப்படுகிறது என்கிறார். அதுவே, இருமை உறவுகள் (குழந்தை – தாய்), மும்மை உறவு (குழந்தை – தந்தை - தாய்உறவு) என்கிற வகையில் உற்பத்தி செய்கிறது என்கிறார்.

**சொல்லாடல்**

சொல்லாடல் என்பது ஆண்டான் சொல்லாடல், கல்விப்புல சொல்லாடல், பகுப்பாய்வு சொல்லாடல், இசிப்புச் சொல்லாடல் என்று பல வகைகளில் குறிப்பிடுகிறார். கடவுள், சாத்தான், பாவம், சொர்க்கம், நரகம் என்பவை ஆண்டான் குறிப்பான்கள் (சொல்லாடல்கள்). இவற்றுள் கல்வியும் அடங்கும். மேலும், ஆண்டான், கல்விப்புல சொல்லாடல்கள் என்பவை ஆண்மைக்குரியது என்கிறார். லக்கானியச் சிந்தனையில் 'உபரி' என்பது நோய்க்குறி மூலதனமாகும்.மேற்கண்ட லக்கானின் உளவியல் சிந்தனைகளைக் கொண்டு மேலாண்மை பொன்னுசாமி அவர்கள் எழுதிய **'பூ நெஞ்சத் தீ'** என்னும் சிறுகதை, பா.ரஞ்சித் அவர்கள் இயக்கிய **'தங்கலான்'** திரைப்படம் ஆகிய இரண்டு படைப்புகளை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

**பூ நெஞ்சத் தீ சிறுகதை**

மேலாண்மை பொன்னுசாமி எழுதிய 'மின்சாரப் பூ' தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இக்கதை யதார்த்த வகை எழுத்துகளுள் ஒன்று. இச்சிறுகதையில் விஜயம், சரசு (மகள்), மருத்துவர், மீனாட்சி, ராசலிங்கம் (வலுக்கை- மாமா முறை) முதலான கதாபாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன. கணவனை இழந்த இளம்பெண் தன்னுடைய பெண் பிள்ளையை வளர்த்து, திருமணம் செய்துவைத்து, பேரப்பிள்ளையைக் காண்பது வரையிலான 'வைராக்கிய மனுஷியை' இக்கதை உருவாக்கி இருக்கிறது. மிகவும் சிறப்பான சிறுகதை. இக்கதையின் கதைசொல்லி (எழுத்தாளர் அல்ல) சில குறைகள், வேட்கைகள், விளைவுகள் ஆகியவற்றைக் கதைக்குள் கொண்டு வந்திருக்கிறது. அவற்றைப் படைப்பு உத்தியாகக் கொள்ளலாம். இச்சிறுகதையின் வெற்றிக்கு இவ்வுத்தியும் ஒரு காரணம். அதாவது, குறை (லக்கானின் லிங்கக்குறை) என்பது வேட்கையை உருவாக்கும். அவ்வேட்கையை அடையும் முனைப்பில் சில விளைவுகளும் உண்டாகும் என்பது லக்கானிய பார்வை.

**குறைகள்** என்றால் இக்கதையில் இளைஞருடனான பாலியல் கனவு, பிள்ளை உடல்நிலை (ஜன்னி வருதல்) மோசமடைதல், அதற்காக மருத்துவரிடம் செல்லுதல், பணம் இல்லாமை, கடவுளிடம் வேண்டுதல் (அய்யனாருக்கு நேர்த்திக்கடன்), உதவிச் செய்வதாகக் கூறும் ராசலிங்கம் (வலுக்கை-மாமா)"கையும் கையும் பொத்துனாப்புல நாம கமுக்கமா இருந்துக்கலாம்" என்கிற பாலியல் சீண்டல் உரையாடல்கள் எனப் பல்வேறு குறைகள் இடம்பெற்றுள்ளன.

குறைகள் என்பது உயிர்களிடத்தில் உண்டாகும் குறைகள் அவற்றை அடைவதற்கான **வேட்கைகளை** உண்டாக்கும். இக்கதையில் வரும் விஜயத்திற்கும் அது நிகழ்ந்திருக்கும். அவ்வாறு உருவான வேட்கைகளை அடைவதற்கான வழிகளைக் கதைசொல்லியானது உருவாக்கி இருக்கிறதா? என்றால் இல்லை. பதிலாகப் பல்வேறு தடைகளை உருவாக்கி இருக்கிறது. இங்கு தடை என்பதும் குறையே. அதாவது, அவளுக்கான பாலியல் விருப்பத்தைத் (வேட்கையைத்) தடைசெய்து கனவாக்கி, பிள்ளையை உடல்நலத்தோடுப் பேணி வளர்த்தல், ஒழுக்கத்தைப் பாதுகாத்தல், வைராக்கிய மனுசியாக சமூகத்தில் நிலைபெற செய்தல் என்கிற சாதனைகளைக் கதைசொல்லி நிகழ்த்திக் காட்டியிருக்கிறது. விதவைப் பெண்ணிற்கான பாலியல் அங்கீகாரத்தை இல்லாமலாக்கியிருக்கிறது. அதாவது, சமூக அங்கீகாரம் இல்லாத எந்தச் செயலையும் செய்ய இயலாதப் பெண்ணாக அவள் இருக்கிறாள். இத்தடைகளை ஏற்கும் அவள் ஒழுக்கத்தைப் பேணும் 'வைராக்கிய மனுசி'யாகச் சமூகத்தில்

புகழ்பெறுகிறாள். அதனால் அவள் ஒரு சமூகப் பெண் என்கிறோம். அதாவது, சமூக நான். அது ஒரு குறை. அது உவர் குறையாகும். ஏனெனில் மொழி என்பது குறையுடையது. அது சமூக குறையாகும். எனவே, விஜயத்தை 'வைராக்கிய மனுசி' என்பதன் வாயிலாக சமூகம் ஒரு குறையுடைய பெண்ணை உற்பத்தி செய்திருக்கிறது. அவள் சமூக நானாக, பண்பாட்டு நானாக, இயற்கைக்கு எதிரான நானாக, தன்னிலை அழிக்கப்பட்டவளாக, செயற்கைப் பெண்ணாக, மொழிப்பெண்ணாகத் பலவகையில் இருக்கிறாள்.

**விளைவு** இவ்வகையான எதார்த்தக் கதைகளானது உயிர்களின் தன்னிலைகளை அழிப்பதும் அவற்றைக் குறையுடையதாக மாற்றி மொழிவழியப்பட்ட சமூக, பண்பாட்டு மனங்களை உருவாக்குவதும் பண்பாட்டுக் குறிப்பானை அடைவதும் பொதுப்புத்திப் பண்பாட்டை உருவாக்குவதுமான தன்மையைக் கொண்டிருக்கின்றன. இத்தன்மை ஆபத்தானது. மிகமோசமான நோய்க்குறிகளைக் கொண்டிருக்கக்கூடிய சமூகத்தையே அவை உருவாக்கும். இங்கு இலக்கியங்களில் குறையை (இன்மையை) உண்டாக்கும்போது ('உத்தி'யாகக் கொள்ளும்போது) இலக்கியத்தன்மை மேலும் மெருகேறுகிறது என்பதும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

**தங்கலான் – திரைப்படம்**

இளம் இயக்குநர் பா.ரஞ்சித் அவர்களால் 2024 ஆண்டு வெளியான திரைப்படம். மாய எதார்த்தவாதத் திரைப்படம். இத்திரைப்படத்தில் வருகிற மொழி யதார்த்த மொழி இல்லை. இக்கதையில் பல்வேறு கனவுக் காட்சிகள் வருகின்றன. அவை பல தலைமுறைகளை இணைக்கக் கூடியதாக இருக்கின்றன. அவை முன்னோர்களின் வருகை, தங்கம் உள்ளிட்ட வளம் சார்ந்த கதையாக, வீரம், நிலம் தொடர்பானதாக இருக்கின்றன.அதற்காக, கதைசொல்லி பல்வேறு **குறைகளை** உற்பத்திச் செய்திருக்கிறது. பசி, நிலம் இல்லாமை, உற்பத்தி சிக்கல், சமத்துவ சிக்கல், செல்வ வளங்கள் அழிப்பு முதலானப் பல்வேறு குறைகளை உற்பத்திச் செய்கிறது.

அதனை நிறைவேற்றும் பொருட்டு உண்டான **வேட்கைகளே** கனவுகளாக வருகின்றன. குறை தொடர்ச்சி கனவு தொடர்ச்சியாகவும் அமைகின்றது. அவ்வேட்கைகள் தங்கலான் சமூக உவரின் வேட்கைகளாக இருக்கின்றன. அவை பசி போக்கல், வேளாண் உற்பத்தி, சமத்துவம், வளங்கள் பாதுகாப்பு, உபரி பயன்பாடு முதலானவற்றை முன்வைக்கின்றன. இவற்றை அடைவதில் பல்வேறு தடைகள் உருவாகி நிற்கின்றன. ஆனாலும், அவற்றை மீறிய ஒரு செயல்பாடுகள் நடந்து கொண்டே இருக்கின்றன. அது லக்கானின் லிங்கத்தை அடைதல் என்றும் சொல்லலாம்.

தங்கலான் சமூகத்தில் உருவான வேட்கைகள் நிறைவேறியதா?, அங்கீகாரம் கிடைக்கிறதா? என்றால் இல்லை. காரணம் ஆண்டான் அதிகாரம். அதாவது, ஆண்மைய அதிகாரம் - தந்தைவழி சமூக வடிவம் – மொழியால் உருவாக்கப்பட்ட சமூகம். இங்கு அதிகாரமும் கல்வியும் ஆண்டான் சொல்லாடல்களாக இருக்கின்றன. லிங்கமே மையம் என்பதால் அதிகாரத்தைத் தொடர்ந்து தக்க வைக்கிற மனநிலை. உபரி அல்லாத இயற்கை வளங்களைச் சுரண்ட நினைக்கிற எண்ணம். ஆண்டான் மையச் சொல்லாடல்களை நிலைபெற செய்யும் தொடர் முயற்சிகள். இச்சமூக சூழலில் அவர்களுக்கு அங்கீகாரம் கிடைப்பது என்பது இயலாத ஒன்று. அதனால் தங்கலான் சமூக வேட்கைகள் அனைத்தும் நிறைவேறாத ஒன்றாக, அமுக்கப்பட்ட உணர்வுகளாகவும் அதற்கான மடைமாற்றங்களைத் தேடி அலையும் ஒன்றாகவும் திரைக்கதை வடிவம் கொண்டிருக்கின்றது. வேட்கைகளை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் மன உந்தல்களைப் பெறுகிறது.

வேட்கைகளை அடைய நினைக்கும் மனம் தொடர்ந்து போராடும். **விளைவு** எதிர்ப்புக்குரல், அவற்றால் உருவாகும் மக்கள் புரட்சி. மக்கள் புரட்சி என்று வருகிறபோது ஆண் பெண் கலந்து போராடுதல் நிகழும். இங்கு லக்கானின் கூற்றுபடி ஆண்களும் பெண்களும் லிங்கத்தை அடைதல் என்பது இயல்பானது. லக்கானின் சிந்தனைப்படி ஆண் = பெண் (சமூக ஆண்மை = பெண்மை) என்ற குறிப்பான் உருவாக்கம் நிகழ்கிறது. ஆண்மை, பெண்மை கற்பிதங்களைத் தகர்த்திருக்கிறது.

அதனால்தான் கதைசொல்லியால், சுயமரியாதை உண்டாக்கல் (பெண்வழி), தாய்வழி சமூகத்தை அடையாளப்படுத்துதல், அதிகாரத்தை வீழ்த்துதல், பெண்ணிடம் (ஆரத்தியிடம் - ஆகன்) மண்டியிட செய்தல், பெண் வளம், குருதி உழைப்பு, குருதி வளம் (பொன்) முதலானப் பல்வேறு கதை தன்மைகளை உருவாக்க முடிந்திருக்கிறது. அதேபோல 'உபரி' சொல்லடலை உருவாக்கி முதலாளியத்தை விமர்சனத்திற்கு உட்படுத்துதல், இயற்கைக்கு எதிரான சுரண்டலைச் (நோய்க்குறி) சாடுவது, எதிர்ப்பது உள்ளிட்ட கதைசொல்லலையும் நிகழ்த்திக் காட்டியிருக்கிறது.

இவை படைப்பின் மிக முக்கியமான உத்திமுறைகளாகும். 'தங்கலான்' மொழிக் குறிகளைப் பலவாறாக அமைத்ததன் வழி ஒரு பின்நவீனத்துவ திரைப் பிரதியாகத் தோற்றம் கொள்கிறது. ஏற்கனவே உள்ள பொதுப்புத்தி சமூகத்திலிருந்து விலகி நிற்கிறது. பொதுப்புத்திக்கு மாற்றான திரைப்படம் என்பதாலேயே 'புரியவில்லை' (இவர்கள் பொதுப்புத்திக்குச் சார்பான மனநிலை கொண்டவர்கள். புதுமையை விரும்பாதவர்கள். அதிகாரச் சொல்லாடலோடு இணக்கம் கொண்டவர்கள். மொழிவயப்பட்டவர்கள்.) என்கிற கருத்தை உண்டாக்கும் பார்வையாளர்களை உருவாக்கி நிற்கிறது. ஆனால், தங்கலான் ஏற்கனவே உள்ள பொதுப்புத்திகளைத் தகர்த்து ஒரு புதிய பொதுப்புத்திகளைக் கட்டமைக்க விழைகிற திரைப்படம். இலக்கிய படைப்பில் ஒரு புதிய முயற்சி. இவற்றின் மொழிக்கூறு பொது சமூகத்திற்கான கூறு அல்ல. புதிய தன்னிலைகளை உருவாக்கி நிற்கிற மொழிக்கூறாகும். மனநோயிலிருந்து தன்னிலைகளை மீட்டெடுக்கிற மொழிக்கூறாகும். இதுபோன்ற புதிய கூறுகளைக் கொண்டிருக்கிற படைப்புகளாகப் பின்நவீனத்துவ படைப்புகள் இருக்கின்றன. தமிழில் பின்நவீனத்துவ படைப்பாளர்களாக தமிழவன், கோணங்கி, பிரேம், இரமேஷ்பிரேதன், இரா.முருகவேல், எம்.ஜி.சுரேஷ், சாருநிவேதிதா முதலானோரைச் சுட்டலாம்.

**நிறைவாக**

லக்கான் சொல்வதைப்போல மொழியை மொழியால் வீழ்த்தமுடியும். அதுவே மருத்துவமாக இருக்கும் என்பதையும் நினைவில் கொண்டு படைப்பில் மாற்று உரையாடலை நிகழ்த்த வேண்டும். பின் நவீனத்துவம் முன் வைப்பதைப்போன்று பெருங்கதையாடலுக்கு மாற்றான சிறுங்கதையாடலை உருவாக்குவதும் எழுத்தாளர்கள் தெளிவாகவும் நேரடியாகவும் எதையும் சொல்லாமல், குறிப்பாகவும் புதிர் தன்மையோடும் சிதைவாக்கங்களோடும் கூடிய ஓர் எழுத்துமுறையைப் பின்பற்ற வேண்டுவதும் மிக அவசியம்.

எதார்த்த படைப்புகளைச் சிறந்த படைப்புகள் என்று அடையாளமிடாத சூழலை உருவாக்குவதும் தேவையாக இருக்கிறது. ஏற்கனவே உள்ள பொதுப்புத்திகளைத் தகர்த்து மாற்று பொதுப்புத்திகளை உருவாக்குவதும் அதனையும் நிலைபேறடையவிடாமல் தகர்க்கிற எழுத்து முறைகளை உருவாக்குவதும் அவசியம். எழுத்தில் உள்ள இடைவெளிகள், இன்மைகள், இருண்மைகள், புதிர்களை நோக்கியப் பயணத்தை மேற்கொள்கிற ஆய்வுமுறைகளை அதிகம் முன்னெடுக்க வேண்டும். அவை உரையாடலின் நுண்ணரசியலைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் சமூகமாக வளரும். மொழியின் குறைகளைச் சரிசெய்கிற எழுத்துமுறை உருவாக்கம் பண்பாட்டளவிலும் ஏற்றத் தாழ்வில்லாத சமத்துவ சமூகத்தை உருவாக்கும்.

**பயன்பட்டவை**


1. மேலாண்மை பொன்னுசாமி, மின்சாரப் பூ, கங்கை புத்தக நிலையம், 8 ஆம் பதிப்பு – 2016.
2. பா.ரஞ்சித் (இயக்குநர்), தங்கலான் (திரைப்படம்), ஸ்டுடியோ கிரீன் & நீலம் தயாரிப்பு, 2024.
3. தி.கு.இரவிச்சந்திரன், ழாக் லக்கான், அடையாளம், 2023.
4. தமிழவன், பழந்தமிழில் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2009.